# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2079/28 - 2018 ජූලි මස 10 වැනි අඟහරුවාදා - 2018.07.10

2079/28 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் அறிவித்தல்**

**தேயிலை ஏற்றுமதித் தொழில்**

தேயிலை ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு வாயிலாகத் தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிவரை சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் ஆட்சேபணைக்கான காரணங்களைக் கூறும் கூற்றொன்றை உடையதாய் எழுத்துவாயிலாகச் செய்யப்படல் வேண்டும்.

ஏ. விமலவீர,<br>
தலைவர்,<br>
தேயிலை ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,<br>
கொழும்பு ,<br>
2018, யூலை 04.

அட்டவணை

தேயிலை ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டனவும், 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளனவும் காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டனவும் 2012- ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அட்டவணையின் II ஆம் பகுதிக்கு பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

வேலையாளர்களின் வகுப்பு

**தரம் II**

மாதிரி எடுத்துக்காட்டுதல், பெட்டிகளைத் திறத்தலும் உள்ளீடுகளை வெளியே எடுத்தலும், வெறும் பெட்டிகளை நிறுத்தல், பொறியிடுவதற்கான கடதாசிகளையும் ஈயத்தாள் களையும் வெட்டுதல், உள்வரிப் பூச்சிடுதல், பெட்டிகளில் தேயிலையைப் பொதியிடுதல், ஆயத்தஞ் செய்தல், மேலே உள்வரிப் பூச்சிடுதலும் பற்றாக வைத்தலும் மூடியிடுதலும் ஆணியடித்தலும் வளையமிடுதலும், கம்பி கட்டுதலும், பழைய அடையாளங்களை வழித்தெடுத்தல், தயாரித்தல், நிறுத்தல் அத்துடன் பொதியிடுதல், கட்டுத்துண்டுகள் ஒட்டுதல் கடைச்சணற் சாக்கு உறைவெட்டுதலும் தயாரித்தலும் கடைச்சணல் நூலினால் உறையிடுதல் களஞ்சியங்களையும் வடிகால்களையும் சுத்திகரித்தலும் கூட்டுதலும் பசுந் தேயிலை வெட்டுதலும் அரித்தலும் மீள வெப்பமூட்டுதலும் பண்படுத்தலும் என்ற தொழில்களில் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட வேலையாளர்கள்.

**இடைநிலைத் தரம்**

தேயிலை நிரப்பப்பட்டபெட்டிகளை நிறுத்தல், கையால் குவித்தல், கையால் கலத்தல் என்ற தொழில்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்கள், பெட்டி தயாரிப்போரும் பழுதுபார்ப் போரும்.

**தரம் I**

பெட்டிகளைத் தரையிறக்குதலும் தூக்குலும், அடுக்குதலும் பெட்டிகளைக் கலவைப் பலகைக்குத் தூக்கிச் செல்லுதலும் களஞ்சியத்துக்குத் தூக்கிச் சென்று மீள அடுக்குதல்,பெட்டிகளை ஆயத்தஞ் செய்தல் அத்துடன் கப்பலில் கொண்டுசெல்வதற்கென ஏற்றுதலும் என்ற தொழில்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளர்கள்.

**காவலாளர்சுள்**

மாதமொன்றுக்கு வழங்கப்படக்கூடிய ஆகக் குறைந்த படிகள்

| ஊழிய ஆண்டு | தரம் II | இடைநிலை தரம் | தரம் I | காவலாளர்கள் |
|---|---|---|---|---|
| | ரூ. ச | | | |
| 1 ஆம் ஆண்டு | 14,000.00 | 14,614.00 | 15,225.00 | 14,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 14,100.00 | 14,741.00 | 15,375.00 | 14,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 14,200.00 | 14,866.00 | 15,525.00 | 14,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 14,300.00 | 14,991.00 | 15,675.00 | 14,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 14,400.00 | 15,116.00 | 15,825.00 | 14,400.00 |
| 6 ஆம் ஆண்டு | 14,500.00 | 15,241.00 | 15,975.00 | 14,500.00 |
| 7 ஆம் ஆண்டு | 14,600.00 | 15,366.00 | 16,125.00 | 14,600.00 |
| 8 ஆம் ஆண்டு | 14,700.00 | 15,491.00 | 16,275.00 | 14,700.00 |
| 9 ஆம் ஆண்டு | 14,800.00 | 15,616.00 | 16,425.00 | 14,800.00 |
| 10 ஆம் ஆண்டு | 14,900.00 | 15,741.00 | 16,575.00 | 14,900.00 |

| ஊழிய ஆண்டு | தரம் II | இடைநிலை தரம் | தரம் I | காவலாளர்கள் |
|---|---|---|---|---|
| 11 ஆம் ஆண்டு | 15,000.00 | 15,866.00 | 16,725.00 | 15,000.00 |
| 12 ஆம் ஆண்டு | 15,100.00 | 15,991.00 | 16,875.00 | 15,100.00 |
| 13 ஆம் ஆண்டு | 15,200.00 | 16,116.00 | 17,025.00 | 15,200.00 |
| 14 ஆம் ஆண்டு | 15,300.00 | 16,241.00 | 17,175.00 | 15,300.00 |
| 15 ஆம் ஆண்டு | 15,400.00 | 16,366.00 | 17,325.00 | 15,400.00 |
| 16 ஆம் ஆண்டு | 15,500.00 | 16,491.00 | 17,475.00 | 15,500.00 |
| 17 ஆம் ஆண்டு | 15,600.00 | 16,616.00 | 17,625.00 | 15,600.00 |
| 18 ஆம் ஆண்டு | 15,700.00 | 16,741.00 | 17,775.00 | 15,700.00 |
| 19 ஆம் ஆண்டு | 15,800.00 | 16,866.00 | 17,925.00 | 15,800.00 |
| 20 ஆம் ஆண்டு | 15,900.00 | 16,991.00 | 18,075,00 | 15,900.00 |
| 21 ஆம் ஆண்டு | 16,000.00 | 17,116.00 | 18,225.00 | 16,000.00 |
| 22 ஆம் ஆண்டு | 16,100.00 | 17,241.00 | 18,375.00 | 16,100.00 |
| 23 ஆம் ஆண்டு | 16,200.00 | 17,366.00 | 18,525.00 | 16,200.00 |
| 24 ஆம் ஆண்டு | 16,300.00 | 17,491.00 | 18,675.00 | 16,300.00 |
| 25 ஆம் ஆண்டு | 16,400.00 | 17,616..00 | 18,825.00 | 16,400.00 |
| 26 ஆம் ஆண்டு | 16,500.00 | 17,741.00 | 18,975.00 | 16,500.00 |

7- 809/1

---

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**இறப்பர் ஏற்றுமதித் தொழில்**

இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் (136 - ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற் கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேணைகள் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிவரை சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்து மூலமாகச் செய்யப்படுவதுடன் ஆட்சேபணைக்கான காரணங்களைக் கூறும் கூற்றொன்றையும் கொண்டாதாக இருத்தல் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, யூலை 06.

**அட்டவணை**

இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமனியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு கடைசியாக வேறுபடுத்தப்பட்டனவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

**தொழிலாளர் வகுப்பு**

**தரம் II**

வெட்டுதலும், பூசனம் பிடித்த இறப்பரைக் கழுவுதலும் அதற்குப் புகையிடுதலும், அமர்த்து பொறிகளுக்கும் நிறுக்கும் எந்திரங்களுக்கும் களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கும் தள்ளுதல் உட்பட பொது வேலை, சிப்பமாக்குவதற்கு இறப்பரை ஒன்று சேர்த்தலும், சுற்றுதலும், அமர்த்துதலும், வளையமிடுதலும், கம்பிகட்டுதலும், கடைச்சணற் சாக்கு உறைகள் வெட்டுதல், வர்ணப்பசை பூசுதலும் காயவைத்தலும் ஒன்றுசேர்த்தலும் அடையாளமிடுதலும் விசேடமாகப் பெறியிடுவதற்கு கடைச்சணற் சாக்கைப் பரவிவிடுதல், சிப்பங்களை கடைச்சணற் சாக்கினால் மூடுதலும் வைத்தலும் சிப்பங்களை, ஆயத்தஞ் செய்தலும் களஞ்சியங்களையும் வடிகால்களையும் சுத்திகரித்தலும் கூட்டுதலும்.

**இடைநிலைத் தரம்**

நிறுத்தல், தரம் பிரித்தல், வகைப்படுத்தல் தொழிலிலீடுபடுத்தப்பட்டுள்ள அமர்த்துபொறி இயக்குநரின் வேலை.

**தரம் I**

சிப்பங்களை ஏற்றுதல், தரையிறக்குதல் அத்துடன் கொண்டுசெல்லல், அடுக்குதல்,

**காவலாளர்கள்.**

| ஊழிய ஆண்டு | தரம் II<br>ரூ. ச | இடைநிலைத் தரம்<br>ரூ. ச | தரம் I<br>ரூ. ச | காவலாளர்கள்<br>ரூ.ச |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 14,000.00 | 14,601.00 | 15,210.00 | 14,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 14,100.00 | 14,726.00 | 15,360.00 | 14,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 14,200.00 | 14,851.00 | 15,510.00 | 14,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 14,300.00 | 14,976.00 | 15,660.00 | 14,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 14,400.00 | 15,101.00 | 15,810.00 | 14,400.00 |
| 6 ஆம் ஆண்டு | 14,500.00 | 15,226.00 | 15,960.00 | 14,500.00 |
| 7 ஆம் ஆண்டு | 14,600.00 | 15,351.00 | 16,110.00 | 14,600.00 |
| 8 ஆம் ஆண்டு | 14,700.00 | 15,476.00 | 16,260.00 | 14,700.00 |

| ஊழிய ஆண்டு | தரம் II<br>ரூ. ச | இடைநிலைத் தரம்<br>ரூ. ச | தரம் I<br>ரூ. ச | காவலாளர்கள்<br>ரூ.ச |
|---|---|---|---|---|
| 9 ஆம் ஆண்டு | 14,800.00 | 15,601.00 | 16,410.00 | 14,800.00 |
| 10 ஆம் ஆண்டு | 14,900.00 | 15,726.00 | 16,560.00 | 14,900.00 |
| 11 ஆம் ஆண்டு | 15,000.00 | 15,851.00 | 16,710.00 | 15,000.00 |
| 12 ஆம் ஆண்டு | 15,100.00 | 15,976.00 | 16,860.00 | 15,100.00 |
| 13 ஆம் ஆண்டு | 15,200.00 | 16,101.00 | 17,010.00 | 15,200.00 |
| 14 ஆம் ஆண்டு | 15,300.00 | 16,226.00 | 17,160.00 | 15,300.00 |
| 15 ஆம் ஆண்டு | 15,400.00 | 16,351.00 | 17,310.00 | 15,400.00 |

7-809/2

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**திரைப்படத் தொழில்**

திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப் பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிவரை சபைத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்து மூலமாகச் செய்யப்படுவதுடன் ஆட்சேபணைக்கான காரணங்களைக் கூறும் கூற்றொன்றையும் கொண்டாதாக இருத்தல் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, யூலை 06 .

**அட்டவணை**

திரைப்படத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் செய்யப்பட்டவையும் 1949 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதிய 9961 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்ட வாறானவையும், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப் பட்டவாறானவையுமான முடிபுகள், அவ்வட்டவனணயின் 1 ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி 1**

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் சேவையாளர் வகுப்புக்களைச் சேர்த்த ஊழியர்களுக்கு நேர வேலைக்கான ஆகக்குறைந்த மாதாந்தச் சம்பள அளவு முறையே மாநகரசபை எல்லைக்குட்பட்ட திரைப்படக் கூடங்கள் மாநகர சபை எல்லைக்குட்படாத திரைப்படக்கூடங்களுக்குரிய வகையில் I ஆம் மற்றும் II ஆம் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**ஊழியர் வகுப்பு**

**(அ) எழுதுவினைஞர் தரமல்லாத**

**தேர்ச்சியற்றோர்**

விளம்பர வண்டியிழுப்போர், விளம்பர அல்லது சுவரொட்டிப் பையன், குளியல் அறைப் பையன், கார் அல்லது சைக்கிள் நிறுத்திட ஏவலாள்,சொக்களேற் பையன், துப்புரவு செய்பவர், உடுதுணியறைப் பையன், மலசலகூடத் தொழிலாளி, தோட்டத்தொழிலாளி, வாசல் காப்போன், மண்டப பையன், சேவகர், சான்ட்விச் பையன், மென்பானம் வைத்திருப்போர், தேர்ச்சியற்ற தொழிலாளி இருக்கை காட்டும் பெண் பணியாளர், உணவு விடுதி மேசைப் பணியாளர், காவலாளர் (பகல்), காவலாளர் (இரவு).

**அரைத்தேர்ச்சியுள்ளோர்**

மதுபானச்சாலை உதவிப் பொறுப்பாளர், உதவி எஞ்சின் ஓட்டுனர், சரிபார்ப்பவர், சமையற்காரர் தரம் II (கீழ்நிலை), மீளச் சுற்றுபவர், தொலைபேசி இயக்குநர், மூன்றாவது உதவி இயக்குநர்.

**தேர்ச்சியுள்ளோர் தரம் II**

மதுபானச்சாலை உதவிப் பொறுப்பாளர், தச்சர், சமையற்காரர் தரம் I உயர் நிலை, மின்சாரத் தொழிலாளர் தரம் II, திரைப்படக்சுருள் பழுது பார்ப்பவர் தரம் II, கட்புல, செவிப்புல இணைப்பு எந்திர இயக்குநர், இரண்டாவது உதவி இயக்குநர், மேற்பார்வையாளர் அல்லது தலைமை சரிபார்ப்போர், கூடாரத் தலைவர், மின்கம்பியாளர், தீயணைப் பாளர்.

**தேர்ச்சியுள்ளோர் தரம் I**

ஆமேச்சர் சுற்றுபவர், மின்சாரத் தொழிலாளர் தரம் I, எஞ்சின் ஓட்டுநர், திரைப்படச் சுருள் அறைபழுதுபார்ப்பவர் தரம் I, தலைமை இயக்குநர், கூடாரம் கட்டுபவர்.

**(ஆ) எழுதுவினைஞர்**

**தரம் III**

விளம்பர எழுதுவினைஞர், உதவிக்காசாளர் எழுது வினைஞர் அனுப்புதல் மற்றும் நீக்கற் பொறுப்பு எழுது வினைஞர், சீட்டு முற்பதிவு எழுதுவினைஞர், ஆசனம் ஒழங்குபடுத்தும் எழுதுவினைஞர்.

**தரம் II**

விளம்பர முகாமையாளர், காசாளர் எழுதுவினைஞர், எழுதுவினைஞர், (கணக்குகளும் பொதுவும்) , தட்டெ ழுத்தாளர், சரக்கு மேசை எழுதிவினைஞர், களஞ்சியப் பொருட் காப்பாளர், கணக்குப் பதிவாளர்,

**தரம் I**

தலைமை எழுதுவினைஞர்

**ஏனையோர்**

முகாமையாளர்

உதவி முகாமையாளர்

**விளக்க அட்டவணை I**
**மாநகர எல்லைக்குள்**
**ஒரு மாதத்துக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

| வேலையாளர்களின் வகுப்பு | ஊழிய ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு |
| அ) எழுதுவினைஞர் தரமல்லாத | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| தேர்ச்சியற்றோர் | 12,000.00 | 12,100.00 | 12,200.00 | 12,300.00 | 12,400.00 |
| ஒரளவு தேர்ச்சியுள்ளோர் | 12,447.00 | 12,572.00 | 12,697.00 | 12,822.00 | 12,947.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் I | 13,149.00 | 13,299.00 | 13,449.00 | 13,559.00 | 13,749.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் I | 14,344.00 | 14,519.00 | 14,694.00 | 14,869.00 | 15,044.00 |
| (ஆ) எழுதுவினைஞர் | | | | | |
| தரம் III | 12,447.00 | 12,572.00 | 12,697.00 | 12,822.00 | 12,947.00 |
| தரம் II | 13,108.00 | 13,258.00 | 13,408.00 | 13,558.00 | 13,708.00 |
| தரம் I (பிரதம எழுதுவினைஞர்) | 13,939.00 | 14,114.00 | 14,289.00 | 14,464.00 | 14,639.00 |
| ஏனையோர் | | | | | |
| முகாமையாளர் | 14,836.00 | 15,011.00 | 15,186.00 | 15,361.00 | 15,536.00 |
| உதவி முகாமையாளர் | 12,960.00 | 13,110.00 | 13,260.00 | 13,410.00 | 13,560.00 |

**அட்டவணை II**
**மாநகர எல்லைக்கு வெளியே**
**ஒரு மாத த்துக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

| வேலையாளர்களின் வகுப்பு | ஊழிய ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு |
| அ) எழுதுவினைஞர் தரமல்லாத | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| தேர்ச்சியற்றோர் | 12,048.00 | 12,148.00 | 12,248.00 | 12,348.00 | 12,448.00 |
| ஓரளவு தேர்ச்சியுள்ளோர் | 12,548.00 | 12,673.00 | 12,798.00 | 12,923.00 | 13,048.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் II | 13,243.00 | 13,393.00 | 13,543.00 | 13,693.00 | 13,843.00 |
| தேர்ச்சியுள்ளோர் தரம் I | 14,438.00 | 14,613.00 | 14,788.00 | 14,963.00 | 15,138.00 |
| (ஆ) எழுதுவினைஞர் | | | | | |
| தரம் III | 12,548.00 | 12,673.00 | 12,798.00 | 12,923.00 | 13,048.00 |
| தரம் II | 12,548.00 | 12,698.00 | 12,848.00 | 12,998.00 | 13,148.00 |
| தரம் 1 (பிரதம எழுதுவினைஞர்) | 13,682.00 | 13,857.00 | 14,032.00 | 14,207.00 | 14,382.00 |
| ஏனையோர் | | | | | |
| முகாமையாளர் | 14,586.00 | 14,761.00 | 14,936.00 | 15,111.00 | 15,286.00 |
| உதவி முகாமையாளர் | 12,656.00 | 12,806.00 | 12,956.00 | 13,106.00 | 13,256.00 |

சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்

அறிவித்தல்

**தெங்கு வளர்த்தல் தொழில்**

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 30 ஆம் பிரிவு வாயிலாகத் தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசித்துள்ள தென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் தேதியன்று நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபணைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, யூலை 06.

**அட்டவணை**

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் தேதிய 99/71 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 1833/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான முடிபுகள், பின்வருமாறு மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

1) அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் வேலையாட்களுக்கு ஏற்புடையதான துண்டு வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளம் பின்வருமாறமைதல் வேண்டும்.

| | நடைமுறை | வீதம் | ரூபா சதம் |
|---|---|---|---|
| I) | பெருந்தோட்டப் பயிர்களை வளர்ப்பதிலும் பேணுவதிலும், தேங்காய்களைப் பறித்தல் | - 1000 மரங்களுக்கு | 2391.00 |
| II) | கொப்பறாவை உற்பத்தி செய்வதில் தேங்காய்களை உரித்தல், உடைத்தல், கொப்பறா பதனிடலும், வேறாக்கலும் | -1000 தேங்காய்களுக்கு | 700.00 |

**பகுதி III**

(2) நடைமுறை

(அ) தெங்குப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினை வளர்த்தலும், பேணுதலும்.

(ஆ) கொப்பறாவினை உற்பத்தி செய்தல்.

மேற்படி நடைமுறைக்கேற்ப நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறமைய வேண்டும்.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| தொழிலாளி ஒருவக்கு ( ஆண்/ பெண்) | நாளொன்றிற்கு | 600. 00 |

சாதாரண வேலை நாளொன்றில் அத்தகைய வேலைக்காக வழங்குவதற்குக் குறிக்கப்பட்ட ஆக்க்குறைந்த சம்பள வீதத்தில் ஒன்றரை மடங்கு, ஞாயிற்றுக்கிழமையில் கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டுள்ள எந்தத் தொழிலாளிக்காயினும் இப் பகுதியில் குறிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு மாறுபடாத வகையில் வழங்கப்படுதல் வேண்டும்.

### பகுதி III 'அ'

(3) (அ) நடத்துநர் ஒருவரின் வேலைக்கு
(ஆ) காவலாளி ஒருவரின் வேலைக்கு

உரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம் .

| **ஏக்கர் அளவு** | **- காவலாளி** | **நடத்துநர்** |
|---|---|---|
| (1) பரப்பளவில் 10 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 25 ஏக்கருக்குக் குறைந்த தென்னந் தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு | 15,000.00 | ஏற்புடையதன்று |
| (2) பரப்பளவில் 25 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 50 ஏக்கருக்குக் குறைந்த ஏதேனும் தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு. | 15,647.00 | 16,080.00 |
| (3) பரப்பளவில் 50 ஏக்கருக்குக் கூடிய தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு | 17,931.00 | 18,364.00 |

07-809/ 4

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

## அறிவித்தல்

### மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் நாளன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தவிசாளரினால் பெற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு ,
2018, யூலை 04.

**அட்டவணை**

மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1999 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 1099/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் இறுதியாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிய 1791/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள் அவ்வட்டவணையிலிருந்து பின்வரும் பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

1. **தொழிலாளர் வகுப்பு.**

**தேர்ச்சியுடையோர்**

பிரிவுத் தலைவர்கள், நானாவித இயந்திர இயக்குநர்கள், வடிவமைப்போர், சார்ஜ் ஹேன்டர்ஸ், (charge handers)போறணை இயந்திர இயக்குநர்கள், அடுப்பு (oven) இயக்குநர், சிரேஷ்ட மின்தூக்கி இயக்குநர், அச்சுருவங்கள் அமைப்போர், ஆராய்ச்சி உதவியாளர்கள், சிற்பங்களை அமைப்போர், படவரைஞர்கள், செவ்வை பார்ப்போர், மின்னுட்பவியலாளர்.

2. **ஓரளவு தேர்ச்சியுள்ளோர்.**

உதவி அச்சுருவங்களை அமைப்போர், நிறம் தீட்டுவோர், (ஸ்பிறே பண்ணுவோர், டிப்பர்ஸ்), தெரிவுசெய்வோர், கனிஷ்ட மின்தூக்கி இயக்குநர், மெருகூட்டுநர், பொதி செய்வோர், பொருட்களை சுத்தஞ்செய்வோர், ஸ்ரிக்கர்ஸ் ஒட்டுவோர், ஷவல் லோடர் (shoval loader) இயக்குநர், உதவி இயந்திர இயக்குநர், மின்சார உற்பத்தி இயந்திர இயக்குநர், உதவி அடுப்பு (oven) இயக்குநர்.

3. **தேர்ச்சியற்றோர்**

சுத்திகரிப்போர், உதவியாளர்கள், சாதாரண வேலையாட்கள், தோட்ட வேலையாளர்கள், இவற்றையொத்த ஏனைய சேவைகளில் ஈடுபட்டுள்ளோர்.

4. **பயிலுனர்கள்**

இரண்டு ஆண்டுக்கால பயிற்சி வரையறையின் கீழ் நானாவித துறைகளிலும் பயிற்சி பெறுவோர்.

**மாதமொன்றுக்கு வழங்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு**

| சேவை ஆண்டு | தேர்ச்சியுள்ளோர் | ஓரளவு தேர்ச்சித் திறனுள்ளோர் | தேர்ச்சித்திறன் அற்றோர் | பயிலுனர் |
|---|---|---|---|---|
| | ரூ. ச | ரூ. ச | ரூ. ச | ரூ. ச |
| 1 ஆம் ஆண்டு | 12,627.00 | 11,769.00 | 11,000.00 | 6,693.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,777.00 | 11,894.00 | 11,100.00 | 6,793.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,927.00 | 12,019.00 | 11,200.00 | |
| 4 ஆம் ஆண்டு | 13,077.00 | 12,144.00 | 11,300.00 | |
| 5 ஆம் ஆண்டு | 13,227.00 | 12,269.00 | 11,400.00 | |

7-809/5

---

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தி**
**(சோக்கலேற்று உற்பத்தியுட்பட) தொழில்**

விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தி (சொக்கலேற்று உற்பத்தியுட்பட) தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபையின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இவ்வறித்தலினகத்தே குறுத்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் அத்தகைய தீர்மானங்களை அதிற் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றியமைப்பதற்கான தனது உத்தேசத்தை அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12 மணி வரை சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபணையும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படிகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,
தலைவர்,
விசுக்கோத்து, இனிப்பு வகைகள்
உற்பத்தி(சொக்லேற்று உற்பத்தி),
கொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு,
2018, யூலை 04.

**அட்டவணை**

விசுக்கோத்து, இனிப்பு வகை உற்பத்தி (சொக்லேற்று உற்பத்தி)த் தொழிலுக்கான சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1968 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதிய 14806 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டனவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2012 ஆம் ஆண்டு திசெம்பர்

மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்ட தீர்மானங்கள், பின்வரும் புதிய பகுதியினை அவ்வட்டவணையின் பாகம் II இற்கு பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

விசுக்கோத்து, இனிப்பு வகை உற்பத்தி (சொக்லேற்று உற்பத்தி) த் தொழிலில் ஈடுபட்டுள்ள கீழ்க்காட்டப்பட்டுள்ள வேலையாளர் வகுப்புக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நேரவேலைக்காக கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த மாதாந்த சம்பள அளவுகள் முறையே இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் இயந்திர சக்தியின்றி இயங்கும் தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கும் உரிய வகையில் I ஆம் மற்றும் II ஆம் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**"அ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்)**

**(அ) விசுக்கோத்து உற்பத்தி**

சேர்ப்புத் திரவியங்களைக் கொதிக்க வைத்தல் "வெப்ப மேசைகளுக்கும்" அவற்றிலிருந்தும் "பாகுவை" அகற்றுதல் தொடர்பான வேலை, "சுடாற்று மேசைகளுக்கும்" அவற்றிலிருக்கும் "பாகுவை" அகற்றுதல் தொடர்பாய வேலை, "பாகுஊட்டி" தொடர்பான செய்கைகள், "பாகுவைத்" தடங்களிற் கொட்டுதல் தொடர்பாய வேலை, "வெட்டிச் சுற்றும் பொறி" தொடர்பான வேலை, "துண்டு செய்பொறி" தொடர்பாய செய்கைகள், " இரவையாக்கு பொறி" தொடர்பான செய்கைகள், சாரம், சீனி, சாயப் பொருள் ஆகியன சேர்த்தல் உட்பட அசைத்தாச்சிகள் தொடர்பாயசெய்கைகள், "புறஉரு அமைக்கும் பொறி" தொடர்பான செய்கைகள், " அரித்தற் பொறி" தொடர்பான வேலை, கொக்கோ விதைகளைத் துப்பரவு செய்தலும் வறுத்தலும், வறுத்த கொக்கோ விதைகளைச் சுத்தி செய் பொறியினுள் இடுதல், பதப்படுத்தல் பொறி, "மண்டி இறுக்குபொறி" ஆகியன தொடர்பாய வேலை, அதிர்வு மேசை " ஆற்று குழாய்" தொடர்பாயவேலை.

**(ஆ) இனிப்பு வகை உற்பத்தி**

சேர்ப்புத் திரவியங்களைக் கொதிக்க வைத்தல் "வெப்ப மேசைகளுக்கும்" அவற்றிலிருந்தும் "பாகுவை" அகற்றுதல் தொடர்பான வேலை, "சுடாற்று மேசைகளுக்கும்" அவற்றிலிருக்கும் "பாகுவை" அகற்றுதல் தொடர்பாய வேலை, "பாகுஊட்டி" தொடர்பாய செய்கைகள், "பாகுவைத்" தடங்களிற் கொட்டுதல் தொடர்பாய வேலை, "வெட்டிச் சுற்றும் பொறி" தொடர்பாய வேலை, "துண்டு செய்பொறி" தொடர்பாய செய்கைகள், " இரவையாக்கு பொறி" தொடர்பாய செய்கைகள், சாரம், சீனி, சாயப் பொருள் ஆகியன சேர்த்தல் உட்பட அசைத்தாச்சிகள் தொடர்பாயசெய்கைகள், "புறஉரு அமைக்கும் பொறி" தொடர்பாய செய்கைகள், " அரித்தற் பொறி" தொடர்பாய வேலை, கொக்கோ விதைகளைத் துப்பரவு செய்தலும் வறுத்தலும், வறுத்த கொக்கோ விதைகளைச் சுத்தி செய் பொறியினுள் இடுதல், பதப்படுத்தல் பொறி, "மண்டி இறுக்குபொறி" ஆகியன தொடர்பாய வேலை, அதிர்வு மேசை " ஆற்று குழாய்" தொடர்பாயவேலை.

**"ஆ" வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்)**

**(அ) விசுக்கோத்து உற்பத்தி**

கலக்கும் தொட்டுகளையும் கொள்கலங்களையும் துப்பரவு செய்தல், சேர்ப்புத் திரவியங்களை நிறுத்தலும் அளத்தலும், இரசாயனப் பொருள்கள், சாரம் சாயம் ஆகியவற்றைக் கூட்டுதல், கலக்கு கருவிகளுக்கு ஊட்டுதல் என்பன உட்பட, பிசைந்த மாவைக் கலத்தல் தொடர்பாய சேவைகள், வெட்டுபொறி தொடர்பான வேலை, வெட்டுதலும் புறஉரு அமைத்தலுமான தொடர்பாய செய்கைகள், கனல் அடுப்பில் இடுவோரினதும் கனல் அடுப்பு உதவியாளரினதும் வேலை உட்பட விசுக்கோத்து சுடுதல்,

**ஆ. இனிப்பு உற்பத்தி**

பழவெல்லம், சீனி சார்வகை, கொக்கோ விதைகள், பால் மா, தாவர வெண்ணெய், ஊன்பசை (Gelatin), இரசாயனப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள் உட்பட்ட சேர்ப்புத் திரிவியங்களை ஏற்றுக் கொள்ளுதல், பண்டகசாலையிடுதலும் தொடர்பாயவேலை, சேர்ப்புத் திரவியங்களை நிறுத்தலும், அளத்தலும், கலத்தலும், ரொபி, சொக்கிலேற்று, தித்திப்புப் பண்டங்கள் ஆகியவற்றை நிறுத்தலும், பொட்டல மாக்குதலும், தித்திப்புப் பண்டங்களைத் தட்டங்களிற் சேர்த்தலும், வெப்ப அறையில் தித்திப்புப் பணடங்களை உலர்த்தலும், ஊன்பசையும், சாயப் பொருளும் இடுதல், ஜுஜுப்புகளை தட்டங்களிற் சேர்த்தல், ஜுஜுப்புகளை நிறுத்தலும் பொட்டலமாக்குதலும், தித்திப்பு பண்டங்களையும், சொக்கிலேற்றையும் காகிதத்திற் சுற்றுதலும், நாம விலாசம் ஒட்டுதலும், பொட்டலமாக்குதலும், மிட்டாய் உற்பத்தி தொடர்பாய அல்லது அவ்வுற்பத்தியின் போது நிகழும் மற்றும் செய்கைகள் அல்லது நடவடிக்கைகள் எவ்வாறாயினும்.

**“இ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்)**

**(அ) விசுக்கோத்து உற்பத்தி**

பிசைந்த மாவைப் பிரித்தல் தொடர்பாய செய்கைகளை, சூடாற்று பரண்களுக்கும் கழுவுதலும் துப்பரவு செய்தலும், வெட்டிய விசுக்கோத்துக்களைச் சேர்த்தலும் அடுக்குதலும், விசுக்கோத்து உற்பத்தி தொடர்பாய அல்லது அவ் உற்பத்தியின் போது நிகழும் மற்றும் செய்கைகள் எவ்வாறாயினும்.

**(ஆ) இனிப்பு வகை உற்பத்தி**

தித்திப்புப் பண்டங்கள், சொக்கிலேற்றுகள், ரொபிகள் என்பவற்றைத் தரம் பிரித்தல், பைகளுக்கு முத்திரை யச்சிடுதல், சொக்கிலேற்று அச்சுகளை நிரப்புதல், சொக்கிலேற்றை அச்சுளிலிருந்து அகற்றுதல்.

**விளக்க அட்டவணை I**
**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

**இயந்திர சக்தியால் இயங்கும் தொழிற் சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு**

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ. ச | 2 ஆம் வகுப்பு ரூ. ச | 3 ஆம் வகுப்பு ரூ. ச | 4 ஆம் வகுப்பு ரூ. ச | 5 ஆம் வகுப்பு ரூ. ச |
|---|---|---|---|---|---|
| “அ” வகுப்பித் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 14,689.00 | 14,839.00 | 14,989.00 | 15,139.00 | 15,289.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 14,689.00 | 14,839.00 | 14,989.00 | 15,139.00 | 15,289.00 |
| “ஆ” வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 14,126.00 | 14,251.00 | 14,376.00 | 14,501.00 | 14,626.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 14,126.00 | 14,251.00 | 14,376.00 | 14,501.00 | 14,626.00 |
| “இ” வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்) | | | | | |

**விளக்க அட்டவணை I (தொடர்ச்சி)**

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ. ச | 2 ஆம் வகுப்பு ரூ. ச | 3 ஆம் வகுப்பு ரூ. ச | 4 ஆம் வகுப்பு ரூ. ச | 5 ஆம் வகுப்பு ரூ. ச |
|---|---|---|---|---|---|
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 13,563.00 | 13,663.00 | 13,763.00 | 13,863.00 | 13,963.00 |
| (ஆ) இனிப்பி வகை உற்பத்தி | 13,563.00 | 13,663.00 | 13,763.00 | 13,863.00 | 13,963.00 |

**விளக்க அட்டவணை II**

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

இயந்திர சக்தியன்றி இயங்கும் தொழிற் சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு

| தொழிலாளர் வகுப்பு | 1 ஆம் வகுப்பு ரூ. ச | 2 ஆம் வகுப்பு ரூ. ச | 3 ஆம் வகுப்பு ரூ. ச | 4 ஆம் வகுப்பு ரூ. ச | 5 ஆம் வகுப்பு ரூ. ச |
|---|---|---|---|---|---|
| "அ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 14,070.00 | 14,220.00 | 14,370.00 | 14,520.00 | 14,670.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 14,070.00 | 14,220.00 | 14,370.00 | 14,520.00 | 14,670.00 |
| "ஆ" வகுப்புத் தொழிலாளிகள் (ஓரளவு தேர்ச்சியுள்ளோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 13,507.00 | 13,632.00 | 13,757.00 | 13,882.00 | 14,007.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 13,507.00 | 13,632.00 | 13,757.00 | 13,882.00 | 14,007.00 |
| "இ" வகுப்புத் தொழிலாளிகள் (தேர்ச்சியற்றோர்) | | | | | |
| (அ) விசுக்கோத்து உற்பத்தி | 13,000.00 | 13,100.00 | 13,200.00 | 13,300.00 | 13,400.00 |
| (ஆ) இனிப்பு வகை உற்பத்தி | 13,000.00 | 13,100.00 | 13,200.00 | 13,300.00 | 13,400.00 |

07-809/6

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.